அவருடைய கோரிக்கை நம்முடைய முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் அந்த வீடுகளைக் கட்டித் தருவதற்கான தகுதி பெற்றிருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் அடையாள அட்டையை வழங்கிட வேண்டும் என்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே முதல்வர் அவர்களும் அது குறித்து எங்கள் துறை அதிகாரிகளோடு தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக அதுவும் விரைவிலே பரிசீலிக்கப்பட்டு அடையாள அட்டை வழங்கக்கூடிய அந்தப் பணியையும் நிறைவேற்றித் தர இந்த அரசு காத்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டதை எதிர்த்து பள்ளிகளைத் திறக்க மாட்டோம் என தனியார் பள்ளிகள் அறிவித்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பல்வேறு தனியார் பள்ளிகள் கல்விக் கொள்ளையில் ஈடுபட்டு, கட்டணக் கொள்ளையில் ஈடுபட்டு, L.K.G. முதற்கொண்டு 12 ஆம் வகுப்பு வரை இலட்சக்கணக்கான ரூபாய் கல்விக் கொள்ளையில் ஈடுபட்டு வந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிற்கேற்ப, மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் மூலமாக தமிழக அரசு சரியான ஒரு கட்டண நிர்ணயம் செய்திருந்தும்கூட, அதை எதிர்த்து அவர்கள் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் சென்றும், உச்ச நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்த பிறகும், நாங்கள் வருகிற ஜூன் மாதத்தில் தனியார் பள்ளிகளைத் திறக்கமாட்டோம், அரசு யார் எங்களுக்குக் கட்டணம் நிர்ணயிப்பது, அரசு நியமித்த நீதிபதி யார் எங்களை இந்தக் கட்டணத்தை வாங்கிக் கொண்டு பள்ளிகளை நடத்தச் சொல்வது என்று மிகத் திமிரோடு, மிக ஆணவத்தோடு பல்வேறு பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும், தொடர்ந்து

2010 மே 14] [திரு. தி. வேல்முருகன்]

தொலைக்காட்சிகளிலும் ஒரு வதந்தியைப் பரப்பி வருகிறார்கள். இதனால், பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுடைய பெற்றோர்களிடத்தில் மிகப் பெரிய பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால், வருகிற ஜூனில் நிச்சயமாக இந்தப் பள்ளிகள் அரசின் கட்டணத்தை ஏற்றுக்கொண்டு திறக்க வேண்டும். திறக்கத் தவறுகின்ற பள்ளிகளை அரசுடைமையாக்குவோம் என்கிற அறிவிப்பை வெளியிட்டு, தமிழ்நாட்டில் இதுபோன்று இனி வருங்காலங்களில் இந்தக் கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்ற அந்தப் பள்ளிகளினுடைய அங்கீகாரத்தை இரத்துச் செய்வதற்கும் அரசு கடுமையான முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, நீங்களும் அதைத்தானே சொல்லப் போகிறீர்கள்? திரு. வை. சிவபுண்ணியம் பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இயங்கி வரக்கூடிய தனியார் பள்ளிகளுக்குக் கட்டணத்தை நிர்ணயிக்கக்கூடிய வகையில் ஓய்வு பெற்ற நீதியரசர் கோவிந்தராஜன் அவர்களுடைய குழு அமைத்திருக்கக்கூடிய அந்தக் கட்டண விகிதங்கள் அனைத்துப் பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் இந்த அவையின் மூலமாக ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய கட்டணங்கள் எங்களுக்குக் குறைவாக இருக்கின்றன என்று எந்தப் பள்ளியின் நிருவாகிகளாவது கருதுவார்கள் என்றால், அவர்கள் நிச்சயமாக அந்த* Committee-*யிடத்திலே* appeal-*க்குச் செல்லலாம். இது மொத்தமாக ஒரு* slab system *இல்லை. ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுய நிதிப் பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளிக்கும் தனித் தனியாக அந்தக் கட்டணத்தை நீதியரசர் கோவிந்தராஜன் அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய அந்தக் குழு நிர்ணயித்திருக்கிறது. விதித்திருக்கக்கூடிய கட்டணங்கள் எங்களுக்குக் கட்டுப்படியாகாது, எங்களால் அந்தப் பள்ளியை நடத்துவதற்கு சிரமமாக இருக்கும் என்று எந்தப் பள்ளியாவது கருதுவார்கள் என்று சொன்னால், அந்த* Committee-*யிடத்திலே அவர்கள்* appeal *செல்வதற்கு அந்தச் சட்டத்திலேயே*

provision இருக்கிறது. ஆகவே, அந்த சம்பந்தப்பட்ட பள்ளிகள், எங்களுக்கு இந்த அளவிற்குக் கட்டணங்கள் குறைவாக இருக்கிறது—ஏனென்றால், இந்தக் கட்டணங்கள் எப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், ஒரு பள்ளியை நடத்துவதற்கு உங்களுக்கு என்ன செலவு இருக்கிறது என்ற விவரங்களை அந்தப் பள்ளிகளிடத்திலிருந்தே பெற்றிருக்கிறோம். ஒவ்வொரு பள்ளிகளிடத்திலிருந்தும், நாங்கள் teacher-களுக்கு இவ்வளவு salary கொடுக்கிறோம். எங்களுடைய overheads இவ்வளவு ஆகிறது என்ற முழு விவரங்களையும் அவர்களிடத்திலிருந்து பெற்று, அவர்கள் கொடுத்திருக்கிற விவரங்களின் அடிப்படையில்தான் இந்தக் கட்டணங்களை நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறோம். இது சாதாரண ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய ஏகோபித்த ஆதரவையும், பாராட்டையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இன்றைக்குப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழ்நிலையில், ஏதேனும் குறிப்பிட்ட பள்ளிகளுக்கு அந்தமாதிரி ஒரு grievance இருந்தால், அவர்கள் நிச்சயமாக appeal-க்குச் செல்லலாம். அவர்கள் அதனைக் கருத்தில் கொண்டு, ஏதேனும் அதிலே மாற்றங்கள் செய்யவேண்டியிருந்தால், அதனை இந்தக் கமிட்டி நிச்சயமாகக் கருத்தில் கொள்வதற்கு வாய்ப்பு உண்டு. அதை விடுத்துவிட்டு, தொடர்ந்து இத்தகைய அறிவிப்புகளையெல்லாம் செய்வது என்பது சரியல்ல என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசைப் பொறுத்தமட்டில், கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தால், அவற்றை செவிமடுத்துச் செய்வோம். ஆனால், இந்த அரசு ஒருக்காலும் மிரட்டல்களுக்குப் பணியாது, அஞ்சாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி, நீங்கள் ஏற்கெனவே 'தமிழன் எக்ஸ்பிரஸ்'-ல் இது விஷயமாகப் பேட்டி கொடுத்திருக்கிறீர்களே! பிறகு அதை விடுத்து என்ன பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் 'தமிழன் எக்ஸ்பிரஸ்'-ல் பேட்டி கொடுத்திருக்கிறீர்களே! (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.